மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி : ''மானியக் கோரிக்கை எண் 56—காட்டுவளம் குறித்த மூலதனச் செலவு என்ற தலைப்பின் கீழ் ரூ. 18,16,12,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்''.

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை (26–4–1986) காலை 9-00 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 8–26 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

(அ) சட்டப்படிக்கான விதிகளும் ஆணைகளும்.

69. வருவாய்த்துறையின் 13–4–1960 ஆம் நாளிட்ட எஸ். ஆர். ஓ. ஏ. 2522/1960 ஆம் எண் அறிவிக்கையில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள் சமய அறக்கட்டளைகள் துறையின் 2–12–1985-ம் நாளிட்ட 1082 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை [தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

(ஆ) அறிக்கைகள், அறிவிப்புகள், ஏனைய தாள்கள்.

131. கோரிக்கை எண். 12—தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக்கட்டளைகள் சட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

132. கோரிக்கை எண் 25—சின்கோனாத் துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1986–87 (தமிழ், ஆங்கிலம்).

133. கோரிக்கை எண். 45—வனத்துறை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு 1986--87 (தமிழ், ஆங்கிலம்).

134. கோரிக்கை எண். 47—செய்தி–திரைப்படத் தொழில் நுட்பவியல் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1986–87 (தமிழ், ஆங்கிலம்).